

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலண்டன், கீழைத்தேயவியல் மற்றும் ஆப்பிரிக்கவியல் பல்கலைக்கழகத்தில் (SOAS) உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலண்டன், கீழைத்தேயவியல் மற்றும் ஆப்பிரிக்கவியல் பல்கலைக்கழக (SOAS) இந்திய வம்சாவளி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார். இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### உழைக்கும் வர்க்கத்தின் ஒளி – சிவப்புச் சூரியனாம்

# மாமேதை கார்ல்மார்க்ஸ் நினைவிடத்தில் செவ்வணக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!



சென்னை, செப்.8 -

மாமேதை கார்ல்மார்க்ஸ் நினைவிடத்தில் செவ்வணக்கம் செலுத்தியது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :

**“தத்துவ ஞானிகள் இதுவரை உலகைப் பல வகைகளில் விளக்கியுள்ளனர்; ஆனால் நோக்கம் என்பது அதனை மாற்றுவதுதான்”.**

“The philosophers have only interpreted the world, in various ways. The point, however, is to change it.”

**உழைக்கும் வர்க்கத்துக்கு ஒளி வழங்கிய சிவப்புச் சூரியனாம் மாமேதை கார்ல்மார்க்ஸ் நினைவிடத்தில் செவ்வணக்கம் செலுத்தினேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# அனைவருக்கும் ஒரே வானம் நீ !



**பெ**ரியார் என்பது
பெயரல்ல
நெருப்பின் வடிவம்!

மு.க.ஸ்டாலின் என்பது
பெயரல்ல
பெரியார் உருவம் !

ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில்
படம் திறந்து
தந்தை பெரியாரை
வானம் தொட
வைத்தார் !

சிலைக்கு
காவிப்பூசும்
வஞ்சகர் முகத்தில்
கரிப்பூசி
முடித்தார் !

மனிதன்
சக மனிதனோடு
சமமாக வாழ
கருத்தை முன்
வைத்தார் !

வெண் கொடி அசையும்
வெண் தாடியது
நிலவெடி என்று
சொல்லவா !

உலக உச்சியில்
தந்தை பெரியார்
பெயர் எழுதிய
பெரியார் பேரன்
நீ அல்லவா !

கல்வெட்டுகளில்
பட்டயங்களில்
எழுதுவதைக் கடந்த
வரலாறுப் பதிவு !

அய்யா கலைஞரின்
பெரியாரை
உலகமயமாக்கலின்
கனவு !

நிறைவேற்றினர்
தமிழர்களின்
முழு நிலவு !
உன் பேச்சில்
தீயின் தூரல்
பெரியார் சமநீதியாக
வருகிறார் !

உன் பேச்சில்
மழையின் சாரல்
அறிஞர் அண்ணா
அறிவுத் தருகிறார் !

மொழி உரிமை
மறுக்கும் யுத்தத்தில்
பகைத் தலை அறுக்கும்
சத்தத்தில்
உன்னிடம் கலைஞரே
தெரிகிறார் !

அனைத்து
நட்சத்திரங்களுக்கும்
ஒரே வானம் நீ !

உலகத் தமிழர்
உரிமைகளுக்கு
ஒரே குரல் நீ !

பெரியாரின்
எழுதுகோல்
பெருமைச் செய்கிறது
உன்னை எழுதி !

மகிழ்கிறது
பெரியார் திடல் கைகள்
உன்னைத் தழுவி !

கூர்ந்து உன்னை
உள்வாங்குகிறது
பெரியார்
கண் கண்ணாடி !

நீ எடுத்து வைக்கும்
ஒவ்வொரு அடியிலும்
பெரியார் கைத்தடிதான்
உன் முன்னாடி !

பெரியாருக்கு
உன் வீட்டில் நீ
சோறு பரிமாறினாய்
பெரியாரோ
உனக்கு
அவரையே பரிமாறினார் !

தலைவா
உன் நாடி நரம்புகளில்
பெரியார்தானே
குடியேறினார் !

ஜெர்மன் இலண்டன்
மட்டுமல்ல
உலகத்தமிழருக்கு
நீயே
முகவரி அட்டை !

என்றும் நீயே
முதலமைச்சர்
வாழ்த்துகிறது
பெரியாரின்
கறுப்புச் சட்டை !



**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை..! முதல் பக்கத் தொடர்ச்சி!

தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை உங்களுக்காக ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருக்கிறது. இந்தத் துறை சார்பில், செய்து கொண்டிருக்கின்ற முக்கியமான சில முன்னெடுப்புகளை மட்டும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால்,

கடந்த நான்கு ஆண்டுகளாக, ஜனவரி 12ஆம் நாளை, அயலகத் தமிழர் நாளாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு மட்டும், இந்த விழாவுக்கு 62 நாடுகளிலிருந்து தமிழர்கள் சென்னைக்கு வந்திருக்கிறார்கள்!

- **அயலகத் தமிழர் நலவாரியம்,**
- **அயலகத் தமிழர்களுக்கான டோல்ஃப்ரீ ஹெல்ப்லைன்,**
- **புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கு சுழல் நிதி,**
- **தமிழ்நாட்டிற்கு வெளியே வாழுகின்ற தமிழர்களுக்கு இன்ஷூரன்ஸ்**

என்று ஏராளமான திட்டங்களை செய்து கொண்டிருக்கிறோம்.

வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் ஓடோடி வந்து உதவுகின்றோம்.

**புலம் பெயர்ந்தவர்களுக்காக ‘வேர்களைத்தேடி’ திட்டம்!**

இது எல்லாவற்றையும்விட, மிக முக்கியமான திட்டம்தான், “வேர்களைத் தேடி” என்ற திட்டம்! புலம்பெயர்ந்த தமிழர்களின் குழந்தைகளை, மாணவர்களை தங்களுடைய வேர்கள் இருக்கின்ற நம்முடைய தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு சென்று, நம்முடைய வரலாற்றை, பண்பாட்டை அறிமுகம் செய்து கொண்டிருக்கிறோம். இப்படி தமிழ்நாட்டிற்கு வந்த பலர், சில தலைமுறைகளாக விட்டுச் சென்ற சொந்தங்களை தேடிக் கண்டுபிடித்து உருகி இருக்கிறார்கள்.

நம்மைப் பொறுத்தவரைக்கும், வாழ்வதும், வளர்வதும், தமிழும் தமிழ் இனமுமாய் இருக்க வேண்டும்!

தலைவர் கலைஞர்தான் சொல்வார், “தமிழர்களாக ஒரு கூட்டத்திற்கு வந்து அமர்ந்து, எழுந்து செல்லும் போதும் தமிழர்களாக கலைந்து செல்லும் காலம் வந்தால் அதுதான் நான் எதிர்பார்க்கும் இலட்சிய வெற்றி!” என்று சொல்வார். அந்தளவுக்கு வேற்றுமைகள் நிறைந்திருந்த சமூகம் இன்றைக்கு, இவ்வளவு ஒற்றுமையாக இருப்பதுதான் நம்முடைய வெற்றி!

தமிழர்கள் உலகத்திற்கானவர்கள்! யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று சொன்னவர்கள் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று சொன்னவர்கள் இந்தப் பெருமையை, அடையாளத்தை நம்முடைய செயல்களால் நிலை நாட்டவேண்டும்!

சாதி, மதம், ஏழை, பணக்காரன் போன்ற வேறுபாடுகள், நம்மை பிரிப்பதோடு, நம்முடைய இனத்தையே வளரவிடாது.

**உங்களின் விருந்தோம்பலுக்கு என் அன்புதான் நன்றி!**

நம்மை எதுவெல்லாம் பிரிக்குமோ, அதையெல்லாம் நாம் மறக்கவேண்டும்! எதுவெல்லாம் நம்மை இணைக்குமோ, அதையெல்லாம் நாம் நினைக்கவேண்டும்! எனவே, தமிழ் என்ற வேரில் வளர்ந்திருக்கும் நாம், நம்முடைய அடையாளத்தை ஒருபோதும் மறக்கக் கூடாது!

அடிக்கடி தமிழ்நாட்டிற்கு வாருங்கள், உங்களுக்காக உங்கள் சகோதரனாக இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அங்கே இருப்பான். அந்த நம்பிக்கையோடு வாருங்கள்.

இங்கே நீங்கள் கொடுத்திருக்கின்ற வரவேற்புக்கும், விருந்தோம்பலுக்கும் என்னுடைய அன்புதான், என்னுடைய நன்றி! என்பதை நான் உங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

எனவே, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன் – பெருமைப் படுகிறேன் – பூரிப்படைகிறேன் – புலங்காகித உணர்வோடு நின்று கொண்டிருக்கிறேன். நான் எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு, எத்தனையோ மாநிலங்களுக்கு, எத்தனையோ நாடுகளுக்கு அரசின் சார்பில் அல்லது எதிர்க்கட்சித் தலைவர் என்கின்ற முறையில், மேயராக இருந்து பொறுப்பேற்று பல நாடுகளுக்கு சென்றிருக்கக்கூடிய அந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கிறேன்.

இப்போது தமிழர்களாக இருக்கக் கூடிய உங்களை எல்லாம் சந்திக்க வந்திருப்பதில்தான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். எல்லையில்லா அன்போடும், மறக்க முடியாத நினைவுகளோடும் தான் இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். உங்கள் அனைவருக்கும் நான் மீண்டும், மீண்டும் என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து, இந்த நட்பும், இந்த தொடர்பும், தொடர்ந்து இருக்கவேண்டும் – இருக்கிறது – இருக்கும் என்ற நம்பிக்கையோடு, இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக் கூடிய அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்து, மீண்டும் ஒரு முறை உங்கள் அனைவருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியை தெரிவித்து, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# தேனியில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் ஐம்பெரும் விழா!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்பு!

தேனி, செப். 8 -

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா, அரசு அங்கீகாரம் பெற்று நூற்றாண்டு நிறைவு விழா, முன்னாள் நிர்வாகிகள் பணி நிறைவு பாராட்டு விழா, விருதுகள் வழங்கும் விழா மற்றும் மாநில பொதுக்குழு கூட்டம் என ஐம்பெரும் விழா தேனி வேலுச்சாமி சின்னம்மாள் மகாலில் நடைபெற்றது.

விழாவிற்கு மாநில தலைவர் மகேந்திரகுமார் தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் தேசிங்கு ராஜன், முன்னாள் மாநில தலைவர் சண்முகராஜன் மற்றும் மாநில நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு வந்த அனைவரையும் தேனி மாவட்ட தலைவர் கணேஷ் குமார் வரவேற்றார்.

விழாவில் தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசினார்கள்.

விழாவில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநில, மாவட்ட நிர்வாகிகள், முன்னாள் மாநில, மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அரசு அலுவலர் ஒன்றியத்தை சேர்ந்த நிர்வாகிகள், உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

விழாவின்போது அரசு ஊழியர்களுக்கு புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து விட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் .

சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும். தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வரும் அரசு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த விழாவில் நிறைவேற்றப்பட்ட 3 முக்கிய தீர்மானங்களை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என வருவாய் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர் விழாவில் பேசும் போது உறுதி அளித்தார். முடிவில் மாநில பொருளாளர் திலகர் நன்றி கூறினார்.



தேனியில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை: மாநகர் போக்குவரத்துக் கழக

# ஊழியர் முன்னேற்ற சங்கம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

## மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் அறிக்கை!

சென்னை, செப். 8 -

மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் அறிக்கை வருமாறு:

உலகத் தமிழ் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு தளபதி அவர்கள்,

ஜெர்மனி இங்கிலாந்து நாடுகளுக்குச் சென்று தொழில் முதலீடுகளை ஈர்த்து 08.09.2025 காலை 7.30 அளவில் தாயகம் திரும்புகிறார்.

(தொ.மு.ச) சென்னை மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் மற்றும் முன்னோடிகள், முதலமைச்சர் அவர்களை வரவேற்க, ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் அருகில், ஆயிரக்கணக்கில் அணி திரளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.